**06.02.2026.**

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 245/2025</u>

அ.சா.**1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசேகரன் | | |
| த/பெ | நாராயணசாமி | | |
| கிராமம் | மழவராயனூர் | தொழில் | பி.வி.சி. பைப் பெண்ட் செய்யும் தொழில் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 50/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 06.02.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் கூட்ரோட்டில் பி.வி.சி. பைப் பெண்ட் செய்யும் தொழில் கூடம் நடத்தி வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன கலாநிதி என் அக்காள் மகன் ஆவார். கடந்த 08.03.2025 ந் தேதியில் மாலை சுமார் 4 மணியளவில் எனக்கு கலாநிதியிடம் போன் தகவல் வந்தது. அவர் கோலியனூர் கூட்டோடு வந்திருப்பதாகவும் தன்னை அழைத்து சென்று வீட்டில் விடுமாறு கேட்டிருந்தார். நான் என்னுடைய passion pro இருசக்கர வாகனம் பதிவு எண். TN13F1814 என்ற மோட்டார் சைக்கிளில் என் அக்காள் மகன் கலாநிதியை என்னுடைய வாகனத்தில் பின்னால் அமர வைத்துக்கொண்டும் நான் வாகனத்தை ஓட்டிக்கொண்டும் சுமார் 4. 35 மணிக்கு கோலியனூர் கூட்ரோட்டிலிருந்து பண்ருட்டி செல்லும் வழியில் உள்ள கோலியனூர் இரயில்வே கேட்டை கடக்கும் போது எங்களுக்கு எதிரில் முதலில் ஒரு ஆம்புலன்ஸ் வேனும், முதல் கேட் தாண்டி இரண்டாவது கேட்

அருகில் சென்ற போது ஆம்புலன்ஸ் வேனுக்கு பின்னால் ஒரு அசோக் லேலைன்ட் லாரி பதிவு எண். TN28AP9988 என்ற லாரி வேகமாக வந்து இரயில்வே கேட்டை இடித்தது. அப்போது கேட் கட்டாகி என் மோட்டார் சைக்கில் பின் பக்கம் அமர்ந்திருந்த என் அக்காள் மகன் கலாநிதி தலை மீது கேட்டின் பூம் விழுந்து காயம் ஏற்பட்டது. சுந்தரிபாளையம் கிராமத்தை சேர்ந்த எங்களுக்கு தெரிந்த ராமச்சந்திரன், ராமலிங்கம், ஆகியோர் அங்கு வந்து 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்து கலாநிதியை முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அப்போது அந்த லாரியின் டிரைவர் அங்கிருந்தவர்களை கண்டு பயந்து இறங்கி ஓடிவிட்டார். கலாநிதி ஏற்கனவே இறந்து விட்டதாக முண்டியம்பாக்கம் மருத்துவமனை மருத்துவர்கள் தெரிவித்தார்கள். நான் காவல் நிலையம் சென்றேன். அங்கு எழுத்து மூலமான புகார் ஒன்றைக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்தப் புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து ஏற்பட்டவுடன் லாரி டிரைவர் காயம் பட்டவருக்கு உதவி எதுவும் செய்யவில்லை. அவர் ஆளே அங்கு இல்லை. அவர் அதிவேகமாக ஒட்டி வந்து பூம் மீது மோதி அவரின் தலையில் விழுந்து அதுதான் கலாநிதி இறப்பதற்கு காரணமாகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

நான் பி.ஏ. வரை படித்துள்ளேன். இந்த விபத்து சம்பந்தமாக புகார் மனுவை நானே தான் எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தேன். அதில் சொல்லப்படும் நானாக எழுதிக் கொண்டது என்றால் சரிதான். ரயில்வே கேட் கோலியனூர் கூட்டு ரோட்டில் இருந்து பண்ருட்டி மார்க்கமாக செல்லும்போது ரயில்வே கிராசிலிருந்து எவ்வளவு தூரம் உள்ளது என்றால், சுமார் 1 கிலோமீட்டருக்கும் கம்மியாக இருக்கும். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், நான் புகார் கொடுத்ததாக சொல்லப்படும் ரயில்வே காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், குறைந்தபட்சம் சுமார் 7 கிலோமீட்டர் தூரம் இருக்கும். ஒரு ரயில்வே கேட் இருந்தால் அந்த ரயில்வே கேட்டில் இரு புற சாலைகளிலும் கம்பியை ஏற்றி அடைப்பார்கள் என்றால் சரிதான். அந்த கேட் ரயில்வே கேட் கீப்பர் இருக்கும் கேட் என்றால் சரிதான். ட்ரெயின் போகும்போது அங்கு இருக்கும் கேட் கீப்பர் தடுப்பை

இறக்குவார் என்றால் சரிதான். அந்த கேட் கீப்பர் தடுப்பை இறக்கும் இடத்திற்கு முன்பே சுமார் 10 - 15 அடி முன்பு வேகத்தடை இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடக்கும் போது நானும், அல்லது எனது அக்கா மகனும், தலைக்கவசம் அணியவில்லை என்றால், நான் தலைக்கவசம் போட்டு இருந்தேன் எனது மருமகன் தலைக்கவசம் போடவில்லை. இந்த விபத்திற்கு முன்பு லாரிக்கு முன்பாக ஒரு ஆம்புலன்ஸ் வந்து அந்த லாரியை ஓவர் டேக் செய்து சென்றது எனக்கு தெரியும் என்றால், தெரியாது. எனக்கு முன்பு ஆம்புலன்ஸ் அதற்கு முன்பு லாரி. அந்த சமயத்தில் ரயில்வே கேட் கீப்பர் அந்த தடுப்பை இறக்கியது நடந்ததா என்றால் நான் கவனிக்கவில்லை. ஆம்புலன்ஸ் வந்ததை கவனித்த கேட் கீப்பர் ஆம்புலன்ஸ் வருவதற்காக வழி கொடுப்பதற்காக அந்த தடுப்பை தூக்கினார் என்றும், அப்போது பின்னாடி நானும் வந்தேன் என்றால் சரியல்ல. லாரி வந்து அந்த பூம் மீது இடித்துதான் பூம் கீழே எனது அக்கா மகன் தலையில் விழுந்து அவர் இறந்து விட்டார் என்று நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. கேட் கீப்பர் ஆம்புலன்ஸ்க்கு வழி விடுவதற்காக தடுப்பை இறக்கும்போது அதை கவனிக்காமல் நாங்கள் பின்னால் சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்தவருக்கு நஷ்ட ஈடு வேண்டுமென்பதற்காக நாங்கள் பொய்யாக லாரியின் ஓட்டுனர் மீது புகார் கொடுத்து அதன் அடிப்படையில் இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த பூம் மீது எதிரியின் லாரி மோதி விபத்து ஏற்படவில்லை என்றும், கேட் கீப்பர் தடுப்பை தூக்கும் போது, அந்த பழமையான பீம் அதுவாகவே என் அக்கா மகன் தலையில் விழுந்து விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் இறந்தவர் எனது அக்கா மகன் என்பதால் அவருக்காக பொய்யாக புகார் கொடுத்து தற்போது பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

<u>இல்லை</u>